# கள்ளக்குறிச்சி நகராட்சி

## <u>நகர் மன்ற சாதாரணக் கூட்டம்</u>

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" குறள்...

**<u>கூட்டம் எண். 04 / 2024</u>** **<u>நாள்.24.09.2024</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் எதிர்வரும் 30.09.2024 ஆம் தேதி திங்கள்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**

## <u>கூட்டபொருள்</u>

**பொருள் எண்.01**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.08-ல் கலைஞர் கருணாநிதி நகர் உள்ள சாலை மண்சாலையாக உள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்துக்கு பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் உள்ள மண் சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்து தர வேண்டி08-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 10.08.2024ஆம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொண்டால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு உகந்ததாக அமையும் என்பதால் மேற்படி பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னுராயிரம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து அல்லது ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1819 / 2024 / இ1)

## பொருள் எண்.02

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21-வார்டுகளில் பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தெரு மின் விளக்குகளை மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (SUIDF) கடன் திட்டத்தில் ரூ.389.66 இலத்சத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 2279 தெருமின் விளக்குகளை LED தெரு மின் விளக்குகளாக மாற்றியமைத்து பத்தாண்டுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு M/s HARIWAY LINES, புதுக்கோட்டை என்ற நிறுவனத்திற்கு 20.02.2023-ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் 2279 எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயம் செய்யப்பட்ட கால அளவு முடிவடைந்துள்ளது, மேலும், அனைத்து தெரு விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி முடிவடைந்து மாதாந்திர இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி நாளாது தேதி வரை முழுமையாக முடிக்கப்படவில்லை.

மேலும் நகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட தெருக்கள் மற்றும் புதிய குடியிருப்புக்கள் ஆகிய பகுதியில் புதிய தெருமின் விளக்குகள் அமைக்கும் பணி 15வது நிதிக்குழு மான்ய நிதியில் 864 எண்ணிக்கை LED தெருமின் விளக்குகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருவதால் போதிய மின்பணியாளர்கள் இல்லாத நிலையில் உள்ளது.

எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு நலன் மற்றும் தெருமின் விளக்கு பணியின் அவசியத்தை கருதி இப்பணியை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் தெருமின் விளக்குகளை ஆன்/ஆப் செய்தல் மற்றும் பழுது ஏற்படும் தெருமின் விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணிகளை கல்லை ஆடவர் சுய உதவி குழுவின் மூலம் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சி தலைவர், அவர்களின் தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கல்லை ஆடவர் சுய உதவி குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.50, நாள்.23.01.2024ல் அனுமதி வழங்கப்பட்டது 31.07.2024ல் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் M/s HARIWAY LINES, புதுக்கோட்டை நிறுவனம் அனைத்து தெருமின் விளக்குகளையும் LED மின் விளக்குகளாக மாற்றியமைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி தொடங்கப்படாத நிலையில் ஏற்கனவே உள்ள தெருமின் விளக்குகளை ஆன்/ஆப் செய்தல் மற்றும் பழுது ஏற்படும் தெருமின் விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணியினை தொடந்து மேற்கொள்ள இப்பணியை ஏற்கனவே செய்து வரும் கல்லை ஆடவர் சுய உதவிகுழு மூலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு(01.08.2024 முதல் 31.01.2025வரை) மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.4.50 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பாதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருமின் விளக்குகளை ஆன்/ஆப் செய்தல் மற்றும் பழுது ஏற்படும் தெருமின் விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணியினை செய்து வரும் கல்லை ஆடவர் சுய உதவிகுழு மூலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.08.2024 முதல் 31.01.2025வரை) மேற்கொள்ளவும், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சி தலைவர், அவர்களின் 2024-2025ம் ஆன்டின் தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 645 / 2023 / இ1)

## பொருள் எண்.03

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் முனியப்பன் கோவில் முன்புறம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. அப்பள்ளியின் முன்பகுதியில் நகராட்சியால் அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால் திறந்தவெளியில் உள்ளதால் அவ்விடத்தில் பொதுமக்களால் அசுத்தம் செய்வதால் அருகில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு நோய் தொற்று ஏற்படும் நிலையில் உள்ளதால் அதனை சீர்செய்து தர கோரி அப்பகுதி பொதுமக்கள் மற்றும் 11வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர் கோரிதன் அடிப்படையில் மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டது.

மேற்படி பகுதியில் பொதுமக்களால் அசுத்தம் செய்யப்படுவதால் அருகில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு நோய் தொற்று ஏற்படும் நிலையில் உள்ளதால் அதனை தவிர்த்திடும் பொருட்டு மேற்படி திறந்தவெளி பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலில் மேல்மூடி அமைத்து இதர வசதிகள் செய்யும் பணிகள் மேற்கொள்ள மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.1,00,000/-(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1852 / 2024 / இ1)**

## பொருள் எண்.04

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15ல் கெந்தபொடி சந்தில் உள்ள சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது இச்சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக ஏற்படுகிறது. எனவே, இத்தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலை மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 02.07.2024ஆம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துக்கு உகந்த வகையில் அப்பகுதியில் சிமெண்ட் சாலை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.3,00,000/-(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1452 / 2024 / இ1)**

## பொருள் எண்.05

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024-2025-ன் கீழ் கள்ளக்குறிச்சி எல்லைக்குட்பட்ட விளாந்தாங்கல் ஏரியில் சர்வே எண்.220ல் திறந்தவெளி கிணறு அமைத்து குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணி ரூ.205 .00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை (4D) எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.19.07.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநகம், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 18484/2023/DO1, நாள். 24.06.2024-ல் மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்வதற்கு, 25.07.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | KNMT- 2023-2024 கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட விளாந்தாங்கல் ஏரியில் சர்வே எண்.220-ல் திறந்த வெளி கிணறு அமைத்து குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணி | ரூ 2,05,00,0 0 | திரு A.K.இளையாழ்வார் கள்ளக்குறிச்சி | ரூ.2,01,58,027/- 0.02% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு,J.மகேஷ்வரன் கள்ளக்குறிச்சி | ரூ.2,05,96,245/- 2.16% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திரு.A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் "0.02%" மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"திரு.A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி"** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இப்பணிக்கான பட்டியல் தொகையினை மேற்படி திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1166 / 2024 / இ1)

## பொருள் எண்.06

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20-ல் சேலம் பிரதான சாலை முருகன் கோவில் அருகில் உள்ள சிமெண்ட் சாலை மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் உள்ள சேதமடைந்த சிமெண்ட் சாலையை மறுசீரமைப்பு பணிகள் மேற்க்கொண்டால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு உகந்ததாக அமையும் என்பதால் மேற்படி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.3,50,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1757 / 2024 / இ1)**

## பொருள் எண்.07

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2024-2025ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E-Tendering) முறையில் 04.09.2024-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைமானி (1-ARG)-க்கு பாதுகாப்பு வேலி (Fencing) மற்றும் சிமெண்ட் தளம் மேடை அமைக்கும் பணி | ரூ. 2,00,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | ரூ.1,83,696/- 0.04% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.1,86,098/- 1.26% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | வி.ஐ.பி கார்டன் பகுதியில் மழைநீர் வடிகால் வாய்கால் அமைக்கும் பணி (வார்டு எண்.01) | ரூ. 3,50,000/- | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.3,35,817/- 0.02% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | ரூ.3,41,899/- 1.79% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | பேருந்து நிலையத்தின் உள்ளே தெற்கு பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள இறைச்சி கடைகளுக்கு கூடுதல் வசதிகள் செய்தல் பணி | ரூ. 5,50,000/- | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | ரூ.5,16,674/- 0.11% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.5,28,032/- 2.08%மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1082 / 2024 / இ1)**

## பொருள் எண்.08

கள்ளக்குறிச்சி நகராட்சியில், குடிநீர் நிதி 2024–2025ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E–Tendering) முறையில் 12.09.2024–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 7,00,000/– | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | **ரூ.689239/– 0.08% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.710537/– 3.01% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 7,00,000/– | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | **ரூ.689197/– 0.09% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திரு.J.மகேஷ்வரன் கள்ளக்குறிச்சி | ரூ.721127 /– 4.54% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 7,00,000/– | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | **ரூ. 688784/– 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.714342/– 3.56% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான/விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகள் நீக்கம் செய்ய தேவையான பொருட்கள் கொள்முதல் செய்தல் பணி | ரூ. 7,00,000/– | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறிச்சி | **ரூ.696896/– 3.02% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | ரூ.718620/– 2.96% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | கள்ளக்குறிச்சி நகராட்சி அண்ணாமலை நகர், பெரியாய் கோவில் தெரு, கரியப்பா நகர் முதல் மற்றும் இரண்டாவது தெரு ஆகிய தெருக்களில் UPVC 1 ¼ குடிநீர் குழாய்கள் அமைத்தல் (வார்டு எண்.19) | ரூ. 2,70,000/– | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | **ரூ.260069/– 0.18% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ. 271825/– 4.33% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1082 / 2024 / இ1)

**பொருள் எண்.09**

சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண். **WP-22538/2024 ல்** திரு.ஜி.ராமன் த/பெ கோவிந்தன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமிப்புதாரர் திரு. A.K.T. மகேந்திரன் என்பவரின் நீலமங்கலம் கிராம புல எண்களில் 47.50 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டுவரும் AKT கல்வி நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு அனுமதி சட்டத்திற்கு புறம்பாக, விதியை மீறி அளிக்கப்பட்டுள்ளது, என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

ஆக்கிரமிப்பு தாரரின் கட்டிடங்கள் நகராட்சி எல்லைக்கு அப்பால் கட்டப்பட்டுள்ளது. இதில் அரசாணை (MS) No.76 நாள்.14.06.2018 க்கு எதிராக விதி மீறல் ஏதுமில்லை, மேலும் மேற்படியான கட்டிடங்கள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றது. மேற்படி கட்டிடங்களுக்கு நீலமங்லம் பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் நகர் ஊரமைப்பு துறை மூலம் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. கள்ளக்குறிச்சி நகராட்சி நிர்வாகம் மூலம் அனுமதி அளிக்கப்படவில்லை, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட சர்வே புல எண்கள் நகராட்சி எல்லைக்கு வெளியே உள்ள புல எண்களாகும், மேற்படி வழக்கில் பிரதிவாதியாக இந்நகராட்சி ஆணையாளரை சேர்க்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கிலிருந்து ஆணையாளர், கள்ளக்குறிச்சி என்பவரை விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ள கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் சார்பாக சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞர், திரு.ஹபீப் ரஹ்மான் அவர்களை வழக்கில் ஆஜராகிடவும், அதற்காகும் செலவினத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்புறிப்பு:- 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வழக்கின் அவசர அவசியத்தினை கருதி சென்னை உயர் நீதி மன்ற அரசு வழக்கறிஞர் திரு.ஹபீப் ரஹ்மான் அவர்களை நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகி நகராட்சி ஆணையாளரை இவ்வழக்கிலிருந்து விடுவித்திட கேட்டு ஒப்படைத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1733/2024/எப்-1)

**பொருள் எண்.10**

சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண். WP-15775/2024-ல் திரு.A.அருண்கென்னடி என்பவரால், திரு.பாண்டியன் த/பெ பழனிமேஸ்திரி மற்றும் திரு.மாதேஷ்வரன் த/பெ வேல்முருகன் ஆகியோர்கள் கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சியால் அனுமதி வழங்கக்கூடாது என ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக இந்நகராட்சி ஆணையாளரை சேர்க்கப்பட்டுள்ளதால். கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் சார்பாக சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.லூர்து பவுல் மவுரியா அவர்களை வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கிற்காகும் செலவினத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்புறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வழக்கின் அவசர அவசியத்தினை கருதி சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் திரு.லூர்து பவுல் மவுரியா அவர்களை நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திட கேட்டு ஒப்படைத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1218/2024/எப்-1)

## பொருள் எண்.11

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024-2025-ன் கீழ் கள்ளக்குறிச்சி எல்லைக்குட்பட்ட தென்கீரனூர் ஏரியில் சர்வே எண்.253ல் திறந்தவெளி கிணறு அமைத்து குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் அமைக்கும் பணி ரூ.214.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, அரசாணை (4D) எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.19.07.2024-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநகம், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 18484/2023/DO1, நாள். 24.06.2024-ல் மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்வதற்கு, 25.07.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | KNMT- 2023-2024<br>கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட தென்கீரனூர் ஏரியில் சர்வே எண்.253-ல் திறந்த வெளி கிணறு அமைத்து குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணி | ரூ 2,14,00,000 | திரு. M.M.ரவி, கள்ளக்குறிச்சி | ரூ.2,11,26,857/-<br>0.04% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s ஸ்ரீ ராம் கன்ஸ்ட்ரக்ஷன் கள்ளக்குறிச்சி | ரூ.2,16,58,348/-<br>2.52% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04% குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.M.M.ரவி, கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் **"0.04%"** மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"திரு.M.M.ரவி, கள்ளக்குறிச்சி"** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இப்பணிக்கான பட்டியல் தொகையினை மேற்படி திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1166 / 2024 / இ1)**

## பொருள் எண்.12

கள்ளக்குறிச்சி நகராட்சி வார்டு எண்.04-ல் உள்ள மாசிலாமணி தெருவில் உள்ள பொதுமக்களுக்கு கேசவலு நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோத்திற்கு 2inch (63mm) குழாய்கள் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் உள்ள வீட்டிணைப்பு குழாய்களுக்கு வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாத நிலையில் அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

எனவே, கேசவலு நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து மாசிலாமணி தெருவிற்கு 3inch (90mm) குடிநீர் விநியோக குழாய் அமைத்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வழங்க ஏதுவாக குழாய்களை மாற்றி அமைத்து தர வேண்டி 04-வது நகர்மன்ற உறுப்பினர், அவர்களின் 28.08.2024ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1823 / 2024 / இ2)**

## பொருள் எண்.13

கள்ளக்குறிச்சி நகராட்சி ஒப்பந்ததாரர்களின் பணிப்பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு படிவம் – 16, 16A, 24Q & 26Q E–Filling செய்யப்பட்டும், வரியில்லா இனங்களுக்கான சேவைவரி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு GSTR–1 & GSTR–3 E–Filling **ராஜு அசோசியட்ஸ், புதுச்சேரி** அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2023–2024 மற்றும் 2024–2025க்கு பட்டியல் வழங்க தோராய செலவினம் ரூ.2.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு,

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2810/2018/பி1)

## பொருள் எண்.14

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறைகள் கடித செ.மு.ஆ.எண்.ஐ1 – 3226– 2024, நாள்.08.08.2024–ல் இந்திய திருநாட்டின் 78வது சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாட ஏதுவாக விழாவிற்கு வரும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைத்து தர தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2024–2025ன் கீழ், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ், பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | சுதந்திர தின விழாவிற்கு கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதிகள் அமைத்தல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு பணி | ரூ.35,000/– |

மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக M/s சக்தி கன்ஸ்ட்ரக்ஷன், கள்ளக்குறிச்சி, என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு சுதந்திர தின விழாவிற்கு கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதிகள் அமைத்தல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு வரப்பெறும் பட்டில் படி செலவுத் தொகையை M/s சக்தி கன்ஸ்ட்ரக்ஷன், கள்ளக்குறிச்சி, என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சுதந்திர தின விழாவிற்கு கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதிகள் அமைத்தல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1756 / 2024 / இ1)**

## பொருள் எண்.15

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட சமுதாய கழிவறைகளை தினசரி சுத்தம் செய்யும் பணிகளுக்கு தகுதிவாய்ந்த தனியார் ஆட்கொடுப்பு மற்றும் இந்நகராட்சி பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 14.09.2023 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மகளிர் குழுவின் பெயர் | மாதாந்திர ஊதிய தொகை ரூ. (1 நபருக்கு) |
|---|---|---|
| 1 | M/s.ரோஜா C.I.G மகளிர் சுய உதவி குழு, கள்ளக்குறிச்சி | 1500.00 |
| 2 | M/s.பாரதியார் மகளிர் மன்றம், கள்ளக்குறிச்சி | 1600.00 |
| 3 | M/s.தமிழன் ஆடவர் சுய உதவிக்குழு கள்ளக்குறிச்சி | 1650.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **ரோஜா C.I.G மகளிர் சுய உதவி குழு, கள்ளக்குறிச்சி** என்ற குழுவின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2056 /2022/எச்1)**

## பொருள் எண்.16

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான EMI சொலிவ்ஷன் கொள்முதல் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.119 நாள்.19.07.2024ல் அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, ஒப்பந்தப்புள்ளிகள் 13.09.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. (1 லிட்டருக்கு) |
|---|---|---|
| 1 | M/s. Sivasakthi Traders, Namakkal | 990.00 |
| 2 | M/s. Trinity Trading Company, Omalur, Salem | 1000.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள M/s. **Sivasakthi Traders, Namakkal** என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1223 /2024/எச்1)**

## பொருள் எண்.17

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.107 நாள்.19.07.2024ல் அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, ஒப்பந்தப்புள்ளிகள் 13.09.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. (1 லிட்டருக்கு) |
|---|---|---|
| 1 | M/s. Sivasakthi Traders, Namakkal | 3300.00 |
| 2 | M/s. Trinity Trading Company, Omalur, Salem | 3325.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள M/s. **Sivasakthi Traders, Namakkal** என்ற நிறுவனத்தின் **குறைந்த ஒப்பந்த**ப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.962 /2024/எச்1)

## பொருள் எண்.18

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான செப்டிங் டேங்க் ஏர் பைப்லைன் கொசுவலை கொள்முதல் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.105 நாள்.19.07.2024ல் அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, ஒப்பந்தப்புள்ளிகள் 13.09.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. (1 எண்ணிக்கை) |
|---|---|---|
| 1 | M/s. Sivasakthi Traders, Namakkal | 27.50 |
| 2 | M/s. Trinity Trading Company, Omalur, Salem | 29.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள M/s. **Sivasakthi Traders, Namakkal** என்ற நிறுவனத்தின் **குறைந்த ஒப்பந்த**ப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1289-1 /2024/எச்1)

## பொருள் எண்.19

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான மஸ்கில் (Moskill) கிருமிநாசினி கொள்முதல் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.120 நாள்.19.07.2024ல் அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, ஒப்பந்தப்புள்ளிகள் 13.09.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. (1 எண்ணிக்கை) |
|---|---|---|
| 1 | M/s. Sivasakthi Traders, Namakkal | 990.00 |
| 2 | M/s. Trinity Trading Company, Omalur, Salem | 1000.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள M/s. **Sivasakthi Traders, Namakkal** என்ற நிறுவனத்தின் **குறைந்த ஒப்பந்த**ப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1289-1 /2024/எச்1)

## பொருள் எண்.20

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சீத்தாராம் நகர் பகுதியில் செயல்பட்டு வரும் நகராட்சி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் கணினிகளுக்கு இணையதளம் வசதிகள் (Internet Leased Line) அமைக்கப்பட்டு Bharat Sanchar Nigam Ltd (BSNL) நிறுவனத்திடம் ஒராண்டுக்கு சந்தா தொகையாக செலுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது எதிர் வரும் நிதியாண்டிற்கு (01.04.2024 முதல் 31.03.2025) முன் கூட்டியே செலுத்தப்பட வேண்டும். அதற்கான கேட்பு BSNL நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | BSNLக்கு தொகை செலுத்திய விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு (Internet Leased Line) BSNL க்கு முதன் முதலில் (ஏற்கனவே) செலுத்திய தொகை | 2,06,500.00 |
| 2 | மேற்படி தொகையில் BSNL நிறுவனம் 04.01.2024 முதல் 31.03.2024 வரை எடுத்துக் கொண்ட கட்டணம் | 49,650.28 |
| 3 | **மீதம் இருப்பு தொகை** | **1,56,849.72** |
| 4 | வரும் நிதியாண்டிற்கு BSNL நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை (01.04.2024 முதல் 31.03.2025 வரை ) | 2,06,500.00 |
| 5 | இருப்பில் உள்ள தொகை போக மீதம் செலுத்த வேண்டிய தொகை (கேட்பு வரப்பெற்றுள்ளது.) | **49,650.28 (49,651.00)** |

எனவே, மேற்படி இணையதளம் வசதிகள் (Internet Leased Line) தொடர்ந்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே இணையதள இணைப்பு கட்டணம் ரூ.49,651/- (ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரத்து ஆறுநூற்று ஐம்பத்து ஒன்று மட்டும் ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை செலுத்தப்பட வேண்டிய அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இணையதளம் வசதிகள் (Internet Leased Line) ஏற்படுத்த கட்டணம் செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 2762 / 2021 / எப்-2)

பொருள் எண்.21

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை–28, அவர்களின் ந.க.எண்.7145/2023/MA2, நாள்.15.12.2023 கடித்தில் நகர்புற உள்ளாட்சியினை ஒட்டி அமைந்துள்ள ஊராட்சிகளின் வருவாய், மக்கள் தொகை மற்றும் வளர்ந்து வரும் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு அருகில் உள்ள மாநகராட்சி அல்லது நகராட்சிகளுடன் இணைப்பது குறித்தான செயற்குறிப்பினை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையுடன் முழு வடிவில் அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கள்ளக்குறிச்சி, மாவட்ட ஆட்சிதலைவர், அவர்களின் 25.07.2024 ந்தேதிய அறிவுரையின் படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:1591/2024/எப்1/ 25.07.2024.ந் தேதிய கடிதத்தில் நகரத்தின் அருகில் உள்ள ஊராட்சிகளான **1, நீலமங்கலம், 2.மாடூர், 3.வீரசோழபுரம், 4.சிறுவங்கூர், 5.SVபாளையம். 6.காரணூர், 7.சடையம்பட்டு. 8.தென்கீரனூர், 9.தச்சூர், 10.பொற்படாகுறிச்சி, 11.க.மாமனந்தல், 12.பெறுவங்கூர். ஆகிய 12 ஊராட்சிகளின்** விபரங்களான 3ஆண்டுகளின் வரவு செலவு கணக்கு, 3 ஆண்டுகளுக்கான தணிக்கை குறிப்புகள், ஊராட்சி மன்ற தீர்மாணம் ஆகியவை வழங்குமாறு கோரப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.அ2/1844/2021/ நாள்.29.07.2024ல் தெரிவித்துள்ளவாறு கீழ்கண்ட 8 ஊராட்சிகளை மட்டும் இணைப்பதற்கான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | பரப்பளவு (ச.கி.மீ) | வார்டுகள் விபரம் | மக்கள் தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்தம் | ஆண் | பெண் |
| 1. | மாடூர் | 3.245 | 6 | 2336 | 1171 | 1165 |
| 2. | நீலமங்கலம் | 5.282 | 9 | 5185 | 2782 | 2403 |
| 3. | பெருவங்கூர் | 4.210 | 9 | 3059 | 1542 | 1517 |
| 4. | சிறுவங்கூர் | 11.050 | 9 | 6679 | 3354 | 3325 |
| 5. | க.மாமனந்தல் | 1.837 | 6 | 2471 | 1291 | 1180 |
| 6. | தென்கீரனூர் | 5.875 | 9 | 5158 | 2582 | 2576 |
| 7. | வீ.பாளையம் | 6.631 | 6 | 1377 | 699 | 678 |
| 8. | வீரசோழபுரம் | 5.830 | 9 | 2348 | 1174 | 1174 |
| | **மொத்தம்** | **44.00** | **63** | **28613** | **14595** | **14018** |

எனவே மேற்படியான 8 ஊராட்சிகளை இந்நகராட்சியுடன் இணைப்பதற்கான முன் மொழிவினை அரசுக்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 2762 / 2021 / எப்–2)

பொருள் எண்.22

நகர்மன்ற தீர்மான எண். 112 நாள்:–19.07.2024 ல் நகராட்சி பகுதியில் டெங்கு, கொரோனா தொற்று மற்றும் இதர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவைக்கேற்ப நபர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ரோஜா C.I.G. மகளிர் குழு, கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாக கடந்த 06.05.2024 முதல் 31.08.2024 வரை தேவைக்கேற்ப நபர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டது.

மேலும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.எண்.7549/அ2/2021 நாள்.03.05.2024 தெரிவிக்கப்பட்டுள்ளதில் தற்போது நகராட்சி பகுதியில் அதிக வெயில் மற்றும் பருவமழை தொடங்க உள்ளதால் பொதுமக்கள் வீடுகளில் வெளிபுறமாக உள்ள திறந்தவெளி தொட்டிகள் மற்றும் அதிக பாத்திரங்களில் தண்ணீர் சேமித்து வைப்பதாலும், அவ்வப்போது பருவமழை பெய்வதாலும் டெங்கு கொசுப்புழு உருவாக காரணமாக உள்ளது. எனவே, ஒவ்வொரு வார்டுகளுக்கும் இரண்டு நபர் வீதம் பணியில் அமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் துரிதமாக செயல்படுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் தற்போது இப்பணிக்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் ரோஜா C.I.G மகளிர் குழுவின் மூலமாக தேவைக்கேற்ப நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள எதிர்வரும் 01.09.2024 முதல் 31.12.2024 வரை பணியாளர்களை நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.418/–வீதம் ஊதியம் வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் ரோஜா C.I.G மகளிர் குழுவின் மூலமாக 01.09.2024 முதல் 31.12.2024 வரை தேவைக்கேற்ப நபர்கள் மட்டும் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும், பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.418/–வீதம் ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2969 /2021/எச்1)

## பொருள் எண்.23

இந்நகர்மன்ற தீர்மான எண். 111 நாள் :- 19.07.2024 ல் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடையில் பிரேதங்கள் எரியூட்டுவதற்கும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள M/s.M.H.T.Engineering Chennai என்ற நிறுவனத்திற்கு கடந்த 01.04.2024 முதல் 31.07.2024 வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மேற்படி பணி நீட்டிப்பு 31.07.2024 அன்றுடன் முடிவடைவதால் பொதுமக்கள் நலன் கருதியும், மேற்படி நிறுவனம் ஏற்கனவே அளித்துள்ள அதே விலை விகிதத்தில் நல்லமுறையில் பணியினை மேற்கொண்டு வருவதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு துருகம் சாலையில் அமைந்துள்ள நகராட்சியின் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 01.08.2024 முதல் 31.12.2024 வரை 5 மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏற்கனவே அளித்துள்ள விலைவிகிதத்தில் M/s.M.H.T.Engineering, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் 01.08.2024 முதல் 31.12.2024 வரை 5 மாதத்திற்கு நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/ 691 /2020 )

## பொருள் எண்.24

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான குளக்கரைக்கடைகள் 25, 26 ஆகியவைகள் 01.09.2021 முதல் 31.08.2024 வரை இரண்டாம் தொகுப்பு காலத்திலிருந்து 01.09.2024 முதல் 31.08.2027 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு (மூன்றாம் தொகுப்பு) இரண்டாம் தொகுப்புக்கான வாடகை தொகையிலிருந்து 15% உயர்வு செய்து 01.09.2024 முதல் 31.08.2027 வரை உள்ள மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கவும், ஏற்கனவே நிர்ணயம் செய்த வாடகையிலிருந்து 15% உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்) | ஏற்கனவே நிர்ணயம் செய்த வாடகை தொகை ரூ.(சேவை வரி தவிர்த்து) | 15% உயர்வு | 01.09.2024 முதல் வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 25 | 042/2014007 | பல்கீஸ்பேகம் | 17557 | 2634 | 20191 |
| 2 | 26 | 042/2014008 | ஆர்.பர்வதம் | 17634 | 2645 | 20279 |

அலுவலகக்குறிப்பு-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 2 கடைகளின் குத்தகைக்காலம் 31.08.2021டன் முடிவுப் பெற்று 01.09.2024 முதல் 31.08.2027 வரையிலான காலத்திற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்த வாடகை தொகையிலிருந்து 15% உயர்வு செய்து புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 338/ / 2024/ அ 2)

**பொருள் எண்.25**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகையினங்களில் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 29.08.2024ல் நடைபெற்றது. ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய குத்தகைதாரர்களுக்கு 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலான ஓராண்டு காலத்திற்கு கோரப்பட்ட குத்தகை தொகையின் அடிப்படையில் நடத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**இனம் எண் 1 பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கான பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்**

| வ. எண் | பெயர் / முகவரி (திருவாளர்) | வங்கி வரைவோலை எண் / நாள் / வங்கி கிளை | வைப்புத் தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ஏ.கந்தன்<br>த/பெ அய்யான்<br>277 வடக்கு தெரு<br>க.அலம்பலம் அஞ்சல்<br>சங்கராபுரம் வட்டம்<br>கள்ளக்குறிச்சி மாவட்டம் | 987045/ 10.07.2024<br>சிட்டி யூனியன் வங்கி<br>கள்ளக்குறிச்சி கிளை | 700000 | 1311000 | |
| **2** | **கே.சுரேஷ்,<br>த/பெ கிருஷ்ணன்<br>86 சித்தேரி தெரு<br>கள்ளக்குறிச்சி** | **548663/10.07.2024<br>பஞ்சாப் நேஷனல் வங்கி கள்ளக்குறிச்சி கிளை** | **700000** | **1312000** | **13,12,000** |

**இனம் எண் 2 பேருந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்**

| வ. எண் | பெயர் / முகவரி (திருவாளர்) | வங்கி வரைவோலை எண் / நாள் / வங்கி கிளை | வைப்புத் தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | எம்.செல்வராஜ்<br>த/பெ மாரி<br>15 பி–சிறுவங்கூர் சாலை<br>கோட்டைமேடு<br>கள்ளக்குறிச்சி | 639111/ 07.07.2024<br>இந்தியன் வங்கி<br>கள்ளக்குறிச்சி கிளை | 500000 | 1622000 | |
| 2 | து.சுரேஷ் த/பெ துரை<br>15 ஏ–சிறுவங்கூர் சாலை<br>கள்ளக்குறிச்சி | 113982/10.07.2024<br>வி.மா.மத்திய கூட்டுறவு வங்கி லிட், கள்ளக்குறிச்சி | 500000 | 1623000 | |
| **3** | **எஸ்.பத்மாவதி<br>க/பெ பாண்டியன்<br>25/பி சிறுவங்கூர் சாலை<br>கள்ளக்குறிச்சி** | **285599/10.07.2024<br>இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கள்ளக்குறிச்சி** | **500000** | **1625000** | **16,25,000** |

**இனம் எண் 3 தினசரி நாளங்காடி கட்டண கழிவறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்**

| வ. எண் | பெயர் / முகவரி (திருவாளர்) | வங்கி வரைவோலை எண் / நாள் / வங்கி கிளை | வைப்புத் தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | து.சுரேஷ் த/பெ துரை<br>15ஏ–சிறுவங்கூர் சாலை<br>கள்ளக்குறிச்சி | 112007/28.08.2024<br>வி.மா.ம.கூ வங்கி லிட், கள்ளக்குறிச்சி கிளை | 100000 | 285000 | |
| **2** | **ம.பிரபு த/பெ மகாலிங்கம்<br>25ஏ சிறுவங்கூர் சாலை<br>கள்ளக்குறிச்சி** | **274703/23.07.2024<br>கரூர் வைசியா வங்கி<br>கள்ளக்குறிச்சி கிளை** | **100000** | **286000** | **2,86,000** |

**இனம் எண் 4 பேருந்து நிலைய நடைபாதையில் தொலைகாட்சி பெட்டி வைத்து வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமம்**

| வ. எண் | பெயர் / முகவரி (திருவாளர்) | வங்கி வரைவோலை எண் / நாள் / வங்கி கிளை | வைப்புத் தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை | | | | | |

**இனம் எண் 5 சாலையோர சுங்கம் வசூலிக்கும் உரிமம்**

| வ. எண் | பெயர் / முகவரி (திருவாளர்) | வங்கி வரைவோலை எண் / நாள் / வங்கி கிளை | வைப்புத் தொகை ரூ. | ஏலக்கேள் வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | எம்.செல்வராஜ் த/பெ மாரி 15/பி சிறுவங்கூர்சாலை கோட்டைமேடு கள்ளக்குறிச்சி | 639114/ 09.07.2024 இந்தியன் வங்கி கள்ளக்குறிச்சி கிளை | 1000000 | 4101000 | |
| 2 | **ஜி.இளங்கோ த/பெ கணேசன் 16/பி சிறுவங்கூர் சாலை கள்ளக்குறிச்சி** | **639113/ 09.07.2024 இந்தியன் வங்கி கள்ளக்குறிச்சி கிளை** | **1000000** | **4102000** | **41,02,000** |
| 3 | து.சுரேஷ், த/பெ துரை 15ஏ சிறுவங்கூர் சாலை கள்ளக்குறிச்சி | 113981/ 10.07.2024 வி.மா.ம. கூ வங்கி லிட், கள்ளக்குறிச்சி | 1000000 | 4095000 | |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியில் 2024–2055க்கு 29.08.2024ல் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையில் குத்தகை எடுத்த குத்தகைதாரர்களுக்கு 01.09.2024 முதல் குத்தகையினை நடத்திக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. 2024–2025ல் எடுக்கப்பட்ட ஏலத்தொகையில் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு செய்து 2024–2025 முதல் 2026–2027 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு நடத்திக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. குத்தகையினம் 5ல் உள்ள சாலையோர சுங்கம் வசூலிக்கும் இனத்திற்கான உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியானது கடந்த ஆண்டு உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.4461000–யினை விட ரூ.359000/– குறைவாக உள்ளது. மேலும் இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை என்பதாலும், தினசரி குறைந்தபட்சம் காலை முதல் இரவு வரை 6 பணியாளர்களும், இரவு முதல் காலை வரை 6 பணியாளர்களும் என நாளொன்றுக்கு 12 பணியாளர்களுக்கான ஆட்கூலி குறைந்தபட்சம் நபர் ஒன்றுக்கு ரூ.500 வீதம் 30 நாட்களுக்கு ரூ.180000 என ஆண்டொன்றுக்கான மொத்த ஆட்கள் கூலி ரூ.21,60,000 (50X12=6000X30= 1,80,000X 12=21,60,000) செலவினம் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும்பொருட்டு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.41,02,000/–யானது நேரடியாக நகராட்சிக்கு வருவாய் ஆகும் இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை என்பதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ள திரு ஜி.இளங்கோ, த/பெ கணேசன், 16/பி சிறுவங்கூர் சாலை, கள்ளக்குறிச்சி என்பவரின் ஏலத் தொகை ரூ.41,02,000/–யை மன்றம் அனுமதிக்கலாம். மேலும் உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரை உரிமம் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
5. நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 338/ 2024/ அ 2)

## பொருள் எண்.26

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் அங்காடிகளை ஆண்டு குத்தகைக்கு எடுத்து நடத்திக்கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 31.07.2024ல் நடைபெற்றது. மேற்படி பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**இனம் எண் 1 பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் அங்காடிகள்**

| வ. எண் | பெயர் / முகவரி (திருவாளர்) | வங்கி வரைவோலை எண் / நாள் / வங்கி கிளை | வைப்புத் தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ஏ.மணிண்டன்<br>த/பெ அம்மாவாசை<br>ஸ்கூல் தெரு, கரியப்பாநகர்,<br>ஏமப்பேர், கள்ளக்குறிச்சி | 274706/29.07.2024<br>கரூர் வைசியா வங்கி<br>கள்ளக்குறிச்சி கிளை | 250000 | 5,05,000 | |
| 2 | **ஜே.முருகன், பொருளாளர்,<br>கள்ளக்குறிச்சி நகர<br>அண்ணா மீன் வியாபாரிகள்<br>நலசங்கம்<br>1/92 ஏகேடி நகர்<br>க.மாமனந்தல் கிராமம்,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம்** | **274707/ 29.07.2024<br>கரூர் வைசியா வங்கி<br>கள்ளக்குறிச்சி கிளை** | **250000** | **5,10,000** | **5,10,000** |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியில் 2024-2025க்கு 31.07.2024ல் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையில் குத்தகை எடுத்த குத்தகைதாரர்களுக்கு குத்தகை உரிமத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் குத்தகையினை நடத்திக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. 2024-2025ல் எடுக்கப்பட்ட ஏலத்தொகையில் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு செய்து 2024-2025 முதல் 2025-2026 மற்றும் 2026-2027 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு நடத்திக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 338/ 2024/ அ 2)

## பொருள் எண்.27

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 781/ஆர்2/2024 நாள் 19.08.2024ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான வரியில்லா இனங்களில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுக்கள் (STEERING COMMITTEE) ஆகியவை அரசாணை எண் (2ப) 66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் (ந.நி.4) நாள் 06.08.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற சுற்றறிக்கை மற்றும் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசாணை மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான கடைகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை தீர்க்க அமைக்கப்பட்ட மண்டல அளவிலான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுக்களை நாடிடவும், அக்குழுக்களின் பரிந்துரையினை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 338 / 2024/ அ 2)

## பொருள் எண்.28

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் தென்புறத்தில் ஏழு கடைகள் 01.10.2018 முதல் 30.09.2021 வரை முதல் தொகுப்பு காலத்திலிருந்து இரண்டாம் தொகுப்பு காலமான 01.10.2021 முதல் 30.09.2024 வரை மூன்றாண்டுகள் முடிவடைவதை தொடர்ந்து 01.10.2024 முதல் 30.09.2027 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு (மூன்றாம் தொகுப்பு) இரண்டாம் தொகுப்புக்கான வாடகை தொகையிலிருந்து 15% உயர்வு செய்து 01.10.2024 முதல் 30.09.2027 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரி விதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்) | 01.10.2021 முதல் 30.09.2024 வரை வாடகை நிர்ணயம் (சேவை வரி தவிர்த்து) | 15% உயர்வு | 01.10.2024 முதல் வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 042/ BD01/ 00032 | அப்துல்காதர் மொய்தீன் | 18630 | 2795 | 21425 |
| 2 | 2 | 042/ BD01/ 00033 | எச்.ஷாகுல்அமீது | 6728 | 1009 | 7737 |
| 3 | 3 | 042/BD01/ 00037 | ஜா.முஸ்தபா | 6843 | 1026 | 7869 |
| 4 | 4 | 042/BD01/ 00035 | எஸ்.கோவிந்தராஜன் | 6613 | 992 | 7605 |
| 5 | 5 | 042/BD01/ 00030 | ஸ்ரீபாலாஜி | 6498 | 975 | 7473 |
| 6 | 6 | 042/BD01/ 00036 | எஸ்.திராவிடமணி | 6498 | 975 | 7473 |
| 7 | 7 | 042/BD01/ 00029 | ஜி.அண்ணாதுரை | 6440 | 966 | 7406 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.10.2021 முதல் 30.09.2024 வரை நிர்ணயம் செய்யப்பட்ட இரண்டாம் தொகுப்பு வாடகை தொகையிலிருந்து 01.10.2024 முதல் 30.09.2027 வரையிலான மூன்றாம் தொகுப்பு காலத்திற்கு 15% உயர்வு செய்து புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1875 / 2015/ அ 2)

## பொருள் எண்.29

கள்ளக்குறிச்சி நகராட்சியில் ஆண்டு குத்தகை இனங்கள் 6 பொது ஏலம் விடப்பட்ட நிலையில் ஆண்டு குத்தகை இனத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய நடைபாதையில் தொலைகாட்சி பெட்டி வைத்து வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு பல்வேறு தேதிகளில் பொது ஏலம் விடப்பட்டும், வைப்புத்தொகை அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்ட காரணத்தினால், பொது ஏலத்தில் எவரும் கலந்து ஏலம் கோர எவரும் முன்வராததால், வைப்புத்தொகை ரூ.200000/- உள்ளதை ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்து பொது ஏலம் கோர மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு பொது ஏலம் கோர யாரும் முன்வராததால் பேருந்து நிலைய நடைபாதை தொலைகாட்சி பெட்டி வைத்து வர்த்தகம் செய்யும் உரிமத்திற்காக வைப்புத்தொகை ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்து பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 338/2024/அ2)

## பொருள் எண்.30

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குப்பட்ட சங்கராபுரம் சாலை கச்சேரி சாலை மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து வார்டு எண்.06, 07, 08, 09 மற்றும் 10 ஆகிய வார்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோத்திற்கு குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் மாநில நெடுஞ்சாலை துறை மூலம் கள்ளக்குறிச்சி முதல் திருவண்ணாமலை வரை சாலையை விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே, மேற்படி சாலை பகுதியில் பொதுமக்களின் குடிநீர் விநியோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக குழாய்களை சாலையை விரிவாக்கம் செய்யும் பணிக்கு இடையூறு இன்றி மாற்றியமைத்து சங்கராபுரம் சாலை மேல்நிலை நீர் தேக்க தொட்டியிலிருந்து அதன் அருகில் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசிய தேவையாக உள்ளது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ 15,00,000/- (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1931 / 2024 / இ2)

## பொருள் எண்.31

கள்ளக்குறிச்சி நகராட்சி சொந்தமான அம்மா உணவகம் நகராட்சி தினசரி நாளங்கடி வளாகப் பகுதியில் செயல்பட்டு வருகிறது. தற்போது இவ்உணவகத்தில் உணவு தயார்படுத்த பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு உணவு தயார் செய்யும் பணிகள் தடைப்படுகிறது. மேலும் உணவு பொருட்கள் பதப்படுத்த பயன்படுத்தப்படும் குளிர்சாதன இயந்திரம், உணவு பரிமாற பயன்படுத்தப்படும் தட்டு, டம்ளர், வாளி மற்றும் ஜக்கு ஆகியவை மிகவும் பழுதடைந்துள்ளது.

எனவே, மேற்படி பழுதடைந்த பொருட்களை பழுது நீக்கம் செய்யவும் முற்றிலும் பழுதுகள் ஏற்பட்ட பொருட்களை மாற்றியமைத்து தொடர்ந்து தடையின்றி இயங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே மேற்படி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1954 / 2024 / இ1)

## பொருள் எண். 32

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் வசூலிக்கும் உரிமம் 31.03.2024ம் தேதியன்று முடிவடையும் நிலையில் பாராளுமன்ற பொதுத்தேர்தல் நன்னடத்தை விதிகள் 16.03.2024ம் தேதி முதல் அமலுக்கு வந்த நிலையில் இவ்வினங்களுக்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. 01.04.2024 முதல் பொது தேர்தல் நன்னடத்தை விதிகள் தளர்வு செய்யும் நாள்முதல் நிர்வாக நலன் கருதியும், நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டும் ஏற்கனவே குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த அதே தொகையில் குத்தகைதாரர்கள் குத்தகை உரிமத்தினை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

பாராளுமன்ற பொதுத்தேர்தல் நன்னடத்தை விதிகள் தளர்வு செய்த பிறகு 6 இனங்களுக்கும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கடந்த 28.06.2024, 11.07.2024, 24.07.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில் பேருந்து நிலைய இரு சக்கர வாகனத்திற்கு நிர்வாக காரணங்களால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்ற காரணத்தினால் பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை தவிர்த்து மீதமுள்ள 5 இனங்களுக்கும் 29.08.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குத்தகைக்கு அதிக ஏலக்கேள்வி கோரிய குத்தகைதாரர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. எனவே, மீதமுள்ள பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்திமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு நிர்வாக நலன் கருதியும், நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவோ அல்லது துறை ரீதியாக (DEPARTMENT COLLECTION) வசூலிக்கவோ நகர்மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண் 338/2024/அ2)

## பொருள் எண். 33

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் தூய்மை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் ஆகியோர் பணியாற்றி வயது முதிர்வு மற்றும் பணியிடை மரணம் ஏற்பட்ட பணியாளர்களுக்கு ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி (SPF) சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்க வேண்டியுள்ளது. மேலும், செயலாளர் நிதி தணிக்கை ஓய்வு துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26299/ஓய்வு/2022-2 நாள்,01.12.2022 தெரிவிக்கப்பட்டுள்ள விபரப்படி சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு அரசு பங்கு தொகை ரூ.10000/- யை சேர்த்து பிடித்தம் செய்யப்பட்ட தொகையுடன் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணியாளர்களுக்கு சிறப்பு சேம நலநிதி, வட்டி தொகை மற்றும் அரசு பங்கு தொகை ஆகியவை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய அரசு பங்கு தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேம நலநிதியுடன் கூடிய வட்டி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2483 /2023/B2)**

பொருள் எண். 34

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14–ல் உள்ள விளாந்தாங்கல் சாலை பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு GI பைப் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் உள்ள குழாய்கள் அமைக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது தற்போது இக்குழாய்களில் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வீன் ஆவதோடு தடையின்றி குடிநீர் வழங்குவது மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

மேலும், மேற்படி பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாய்களை UPVC குழாய்யாக மாற்றி அமைத்து தர வேண்டி 14–வது நகர்மன்ற உறுப்பினர், அவர்களின் 19.08.2024ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, மேற்படி பகுதியில் உள்ள GI குடிநீர் விநியோக குழாய்களை UPVC குழாய்யாக மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ. 3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1770 / 2024 / இ2)

## பொருள் எண். 35

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் 18.01.20244ஆம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரையில் 26.01.2024ல் இந்திய திருநாட்டின் குடியரசு தின விழாவை சிறப்பாக கொண்டாட ஏதுவாக விழாவிற்கு வரும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைத்து தர அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2023–2024ன் கீழ், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ், பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | சுதந்திர தின விழாவிற்கு கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதிகள் அமைத்தல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு பணி | ரூ. 76,300/– |

மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய M/s சக்தி கன்ஸ்ட்ரக்ஷன், கள்ளக்குறிச்சி, என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு குடியரசு தின விழாவிற்கு கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைக்கும் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு வரப்பெறும் பட்டியல் படி செலவுத் தொகையை M/s சக்தி கன்ஸ்ட்ரக்ஷன், கள்ளக்குறிச்சி, என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடியரசு தின விழாவிற்கு கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை அமைத்தல் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 966 / 2024 / இ1)

பொருள் எண். 36

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குப்பட்ட வார்டு எண். 04, க.மாமனந்தல் ஏரியில் (பெரியேரி) 2018–2019 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் 20 மீட்டர் ஆழத்திற்கு புதியதாக திறந்தவெளி கிணறு அமைக்கப்பட்டு, கேசவலு நகர் 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்பட்டு, வார்டு எண். 02, 03, 04, 13, 14 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது மேற்படி திறந்தவெளி கிணற்றில் வறட்சியின் காரணமாக நீர்ஊற்று குறைவாக உள்ளது. எனவே, மேற்படி வார்டு பகுதிகளுக்கு குடிநீர் தினசரி முறையாக வழங்குவதில் தட்டுபாடு ஏற்பட்டு வருகிறது. மேலும், தற்போது நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகிவரும் சூழ்நிலையில் கிணற்று நீர் போதுமானதாக இல்லாததால், மேற்படி திறந்தவெளி கிணற்றினை சுமார் 5 மீட்டருக்கு ஆழப்படுத்தினால் கூடுதலான குடிநீர் பெறப்படும் என்பதால், கிணற்றினை ஆழப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, க.மாமனந்தல் ஏரியில் (பெரியேரி) அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றினை கூடுதலாக ஆழப்படுத்த தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ. 12,50,000/– (ரூபாய் பனிரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிகலாம்.
2. குடிநீர் பணியின் அவசர, அவசியத்தை கருதியும், பொதுமக்களுக்கு தினசரி தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவதை கருத்தில் கொண்டும் பணியினை உடனடியாக மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். / 2024 / இ2)

பொருள் எண். 37

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தினசரி சேகராமாகும் குப்பைகளை துருகம் சாலை பகுதியில் உள்ள இரண்டு நுன்உர மையங்கள் மற்றும் நகராட்சி அலுவலக வளாகப்பகுதியில் உள்ள நுன்உர மையங்களுக்கு கொண்டுவரப்பட்டு அவற்றை மக்கும் குப்பைகள் மக்கா குப்பைகள் என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உலரவைத்தும், குப்பைகளை அறைக்கும் இயந்திரம் மூலம் அறைத்து உரமாக்கும் பணிகள் நடைப்பெற்று வருகிறது.

மேற்படி, மூன்று நுன்உர மையங்களும் தலா 4 டன் குப்பைகளை என 12 டன் குப்பைகளை கையாளும் திறன் கொண்டதாக உள்ளது இவற்றில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு தினசரி குப்பைகளை இறுதியாக்கம் செய்யும் பணிகள் பாதிப்படைகிறது. மேலும் மூன்று நுன்உர மையங்களிலும் கட்டடங்கள் சிறு சிறு பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் பணியாளர்கள் பணிகள் மேற்கொள்வது மிகவும் பாதிப்படைகிறது.

எனவே, இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று நுன்உர மையங்களில் உள்ள இயந்திரங்களில் அவ்ப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்யவும், நுன்உர மையங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ. 5,00,000/-(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். / 2024 / இ1)

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**